சார்பு நீதிமன்றம், மேலூர்
OS No.26/2019

பெயர் : அழகர்(பி.சா.7)
தகப்பனார் பெயர் :லெட்சுமணன்
கணவர் பெயர் :
வயது :57
கிராமம் :கருங்காலக்குடி
வட்டம் :மேலூர்
தொழில் :பத்திர எழுத்தர்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

07.02.2026

பி.வா.சா.7 முதல் விசாரணை:

நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை பெற்று சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பி.சா.ஆ.17 உயில் சாட்சியிடம் காட்டப்பட்டு, சாட்சி அதை பார்வையிட்டு அந்த உயிலை தான் தயாரித்தாக குறிப்பிடுகிறார். மேற்படி உயிலானது இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி முத்துக்கருப்பன் ஆசைத்தம்பி மற்றும் பூமிராஜ், ஆகியோருக்கு மட்டும் உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி உயிலை தயாரித்து கொடுத்தவர் என்ற இடத்தில் கையெழுத்திட்டுள்ளது நான் தான். மேற்படி உயில் சின்னையா மற்றும் ஆண்டிச்சாமி ஆகியோர் சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளார்கள். மேற்படி முத்துக்கருப்பன் உயிலை எழுதி கொடுக்கும் போது என்ன மனநிலையில் இருந்தார் என்றால் நல்ல சுயநினைவுடன் இருந்தார்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை :

பி.சா.ஆ.17 உயிலில் தயாரித்தவர் என்ற மட்டும் தான் எழுதி கையெழுத்திட்டுள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.17 உயிலில் எழுதியவரும் சாட்சியமுமான என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.17 உயிலில் சொன்ன முத்துக்கருப்பன் என்பவரை நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி பி.சா.ஆ.17 உயிலை யார் சொல்ல, தயாரிக்கப்பட்டது, யார் அவரை அழைத்து வந்தார்கள் என்ற விபரம் தெரியாது என்றால் சரியல்ல. முத்துக்கருப்பன்

நேரடியாக என் பத்திர அலுவலத்திற்கு வந்தார். உயில் எழுதும்போது முத்துக்கருப்பனுக்கு வயது சுமார் 85 என்றால் சரியல்ல, 80 இருக்கும். உயிலை தயாரிக்கும் போது வெள்ளையன் மகன் முத்துக்கருப்பன் தான் என்பதை நிருபிப்பதற்கு ஆவணத்தை பார்த்தேனா என்றால் பார்த்தேன். முத்துக்கருப்பன் அவருடைய வாக்காளர் அடையாள அட்டையை ஆவணமாக காட்டினார். மேற்படி உயிலில் வாக்காளர் அடையாள அட்டையில் உள்ள முத்துக்கருப்பன் தான் உயில் எழுதிய நபர் என்ற வாசகம் பி.சா.ஆ.17 உயிலில் கூறப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.17 உயிலில் கையெழுத்து செய்த முத்துக்கருப்பன் என் கண்முன்னால் கையெழுத்து செய்தார் என்ற வாசகத்தை நான் உயிலில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ17 உயிலில் சாட்சிகளாக கையெழுத்திட்ட ஆண்டிச்சாமி, சின்னையா ஆகியோர் எனது கண்முன்னிலையில் கையெழுத்து செய்தார்கள் என்ற வாசகமும் இடம்பெறவில்லை என்றால் சரிதான். (6மற்றும் 7ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது)

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.02.07 20:13:35 +0530

Sub Judge

Melur